# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

# மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை HRC 46/1 இன் கீழ் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் பணிப்பாணை

# பொது மக்களுக்கான பிரதி

**இலங்கை தொடர்பான பிரேரணை 46/1 இன் கீழ் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் (OHCHR) பணிப்பாணை என்ன?**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2021 மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட அதன் 46/1 பிரேரணைக்கு ஊடாக, பொறுப்புக் கூறலை முன்னெடுப்பதற்கென இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் சம்பந்தப்பட்டக் குற்றச் செயல்கள் தொடர்பான சான்றுகளைப் பாதுகாத்து வைத்து, பகுப்பாய்வு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்திருந்தது. எனவே, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் (OHCHR) ஆற்றலைப் பலப்படுத்துவதற்கு அது தீர்மானித்தது: ‘‘தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பவற்றை சேகரித்து, ஒன்று திரட்டி, பகுப்பாய்வு செய்து, பாதுகாத்து வைப்பதற்கும், பாரதூரமான மனித உரிமை மீறல்கள் அல்லது இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனித நேயச் சட்டத்தின் மிக மோசமான அத்துமீறல்கள் என்பன தொடர்பாகச் சாத்தியமான எதிர்காலப் பொறுப்புக்கூறல் உத்திகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் தொடர்பாகப் பரப்புரைகளை மேற்கொள்வதற்கும், உறுப்பு அரசுகளால் முன்னெடுக்கப்படும் செயன்முறைகளையும் உள்ளடக்கிய விதத்தில் தகுதி வாய்ந்த ஓர் நியாயாதிக்கத்தின் கீழ் சம்பந்தப்பட்ட நீதித் துறை மற்றும் ஏனைய நடைமுறைகளுக்கு ஆதரவு அளிப்பதற்குமென’’ இந்த முடிவு எடுக்கப்பட்டது (செயற்பாட்டுப் பந்தி 6). நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றில் இடம்பெற்று வரும் முன்னேற்றத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாகத் தொடர்ந்து கண்காணிப்பை மேற்கொண்டு, மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கையிட வேண்டும் என்றும் அப்பேரவை மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்திடம் கேட்டுக் கொண்டது (பந்தி 16).

**இந்தப் பணிப்பாணையின் செயற்பரப்பு என்ன? இலங்கையில் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தின் (OHCHR) பொறுப்புக் கூறல் கருத்திட்டம் என்ன செய்யப் போகிறது?**

மனித உரிமைகள் பேரவையின் பணிப்பாணையை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு, மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் நான்கு திட்டவட்டமான பணிகளை மேற்கொள்வதற்கென ஒரு புதிய விசேட OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்தை (OHCHR Sri Lanka Accountability Project) ஸ்தாபிக்கின்றது:

- இலங்கையில் நிகழ்த்தப்பட்ட அத்துமீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பவற்றைச் சேகரித்து, தொகுத்து, பாதுகாத்து வைத்து, பகுப்பாய்வு செய்தல்;
- இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டத்தின் மிக மோசமான அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கான எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கென சாத்தியமான உத்திகளை அபிவிருத்தி செய்தல்;

- பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோருக்காக பரப்புரைகளை மேற்கொள்ளல்; மற்றும்
- உறுப்பு அரசுகளையும் உள்ளடக்கிய விதத்தில் தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்துடன் சம்பந்தப்பட்ட நீதித் துறை நடவடிக்கைகள் மற்றும் ஏனைய வழக்கு நடைமுறைகளுக்கு ஆதரவளித்தல்.

**நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அனைத்து அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் விசாரணைகள் நடத்துமா?**

இந்த அணி மனித உரிமைகள் பேரவையின் பணிப்பாணையின் கீழ் செயற்படுவதுடன், மோதலுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் குறிப்பிட்ட ஒரு தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் அல்லது குறிப்பிட்ட சில பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள், குறிப்பிட்ட ஒரு காலப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் அல்லது இலங்கையின் ஏதேனும் ஒரு புவியியல் பிரதேசத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள் என்பவற்றுக்கு என அந்தப் பணிப்பாணை வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட அத்துமீறல்கள் மற்றும் சர்வதேசச் சட்டத்தின் துஷ்பிரயோகங்கள் என்பன எந்தத் தரப்பினால் அல்லது தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக கூறப்பட்டிருந்தாலும், அது அத்தகைய அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பவற்றைச் சேகரித்து, தொகுத்து, பாதுகாத்து, பகுப்பாய்வு செய்யும். மேலும், தரநியம ரீதியான முறைமையியலுடன் பகுப்பாய்வு செய்வதற்கென தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பன கிடைக்கக் கூடிய எந்தவொரு மூலாதாரத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்; அல்லது சேகரிக்கப்படும். ஒருவரைக் குற்றவாளியாக்கும் அல்லது நிரபராதியாக்கும் தகவல்கள் அல்லது சான்றுகள் என்பன ஒரே விதத்தில் கையாளப்படும்.

**இந்தப் பணிப்பாணை சிரியா மற்றும் மியான்மார் ஆகிய நாடுகளுக்கான விசாரணைப் பொறிமுறைகளை ஒத்ததாக இருந்து வருகின்றதா?**

இல்லை. பிரேரணை 46/1 இன் கீழ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மேலே அடையாளம் காணப்பட்டிருக்கும் நான்கு திட்டவட்டமான துறைகளில் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தின் ஆற்றலை பலப்படுத்துவதென தீர்மானித்துள்ளது. எனவே, இந்தப் பணி OHCHR க்கு உள்ளேயே இடம்பெறவிருப்பதுடன், அது மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும். அது அதன் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைப் பிரேரணை 46/1 இன் பணிப்பாணையின் பிரகாரம் மனித உரிமைகள் பேரவைக்கு பருவ கால அறிக்கைகளுக்கு ஊடாக வழங்கும்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2016 டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட சிரிய அரபுக் குடியரசு தொடர்பான பொறிமுறை மற்றும் 2018 செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் ஸ்தாபிக்கப்பட்ட மியான்மார் நாட்டுக்கான பொறிமுறை என்பன முழுமையாக சுயாதீன அமைப்புக்களாக இருந்து வருவதுடன், அவை ஒவ்வொன்றும் அவற்றின் மூத்த ஐ நா அதிகாரிகளின் தலைமையின் கீழ் இருந்து வருகின்றன. சிரியா மற்றும் மியான்மார் பொறிமுறைகள் ஆளணி மற்றும் வளங்கள் என்பவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவில் பாரிய அளவிலான பொறிமுறைகளாக இருந்து வருகின்றன.

திட்டவட்டமான ஒரு நிலவரம் தொடர்பாக விசாரணை செய்து, பேரவைக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்கென மனித உரிமைகள் பேரவையினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுயாதீனமான விசாரணை ஆணைக்குழுக்கள் அல்லது உண்மையைக் கண்டறியும் செயலணிகள் (Facts – Finding Missions) என்பவற்றிலிருந்து OHCHR இலங்கை பொறுப்புக்கூறல் கருத்திட்டம் வேறுபட்டதாகும்.

வழமையாக சுயாதீனமான நிபுணர்களைக் கொண்டிருக்கும் அத்தகைய அமைப்புக்களின் பணிப்பாணைகள் முழுமையாக OHCHR இலிருந்து புறம்பானவையாகவும் இருந்து வருகின்றன.

**குற்றமிழைத்ததாகக் கூறப்படும் நபர்களுக்கு எதிராக OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்க முடியுமா?**

இல்லை. அது ஒரு நீதிமன்றமோ அல்லது விசாரணை மன்றமோ அல்ல. அதன் பணிப்பாணையைச் செயற்படுத்தும் விடயத்தில் அது தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் தேசிய, பிராந்திய அல்லது சர்வதேச நீதிமன்றங்களில் இடம்பெறும் குற்றவியல் அல்லது சிவில் வழக்குகளுக்கென சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்குத் தகவல்களை வழங்க முடியும். அதாவது, நியாயம், உரிய செயன்முறை, மரண தண்டனையைப் பிரயோகிக்காமை மற்றும் பிரயோகித்தக்க ஏனைய மனித உரிமை தர நியமங்களுக்கு இணங்கி ஒழுகுதல் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்கமைவாக அத்தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத விடயங்களில் அத்தகைய ஒத்துழைப்புக்கான நன்கு ஸ்தாபிதமாகிவுள்ள உள்ளக செயன்முறைகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு கொண்டுள்ளது. இலங்கையில் OHCHR பொறுப்புக்கூறல் கருத்திட்டம் இப்பணியின் போது அதே கொள்கைகளையும், தர நியமங்களையும் பிரயோகிக்கும்.

**OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் எவ்வாறு தகவல்களைச் சேகரிக்கும்? அவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்களுக்கு என்ன நடக்கும்?**

OHCHR இலங்கை பொறுப்புக்கூறல் கருத்திட்டம் அரசாங்க அதிகாரிகள், ஏனைய உறுப்பு அரசுகள், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், சிவில் சமூகப் பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக மூலாதாரங்களை வைத்திருக்கும் ஏனைய தரப்புக்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் தகவல் மற்றும் சான்றுகளை வழங்க விரும்பும் அனைத்து மூலாதாரங்களிலிருந்தும் அவற்றைச் சேகரிக்கும். குறிப்பாக, ஆயுத மோதலின் போதும், 2009 ஆம் ஆண்டில் அது முடிவடைந்த பின்னரும் இலங்கையில் இடம்பெற்றிருக்கும் மனித உரிமைகள் தொடர்பிலான பாரிய அத்துமீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் மனித நேயச் சட்டத்தின் அத்துமீறல்கள் என்பன தொடர்பாக ஐ நா அமைப்புக்கள் ஏற்கனவே விரிவான ஆவணங்களைச் சேகரித்துள்ளன. சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பன OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறும் கருத்திட்டத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு, பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், அனைத்துத் தகவல்களும், சான்றுகளும் மிகச் சிறந்த சர்வதேச நடைமுறைகளுக்கான தரநியமங்களின் பிரகாரம் பாதுகாப்பாகச் சேகரம் செய்து வைக்கப்படும். OHCHR இன் தரநியமம் சார் நடைமுறைக்கு இணங்கிய விதத்தில் இந்தப் பணிப்பாணையின் பிரகாரம், வெளிப் பாவனைக்குத் (பாவனைகளுக்கு) தகவல்களை வழங்குவதாக இருந்தால், அத்தகவல்களை வழங்கியவர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும் என்பது இத்தகவல்களைக் கையாள்வதன் அடிப்படை அம்சமாக இருந்து வருகின்றது.

**OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் எங்கு அமைந்திருக்கும்?**

OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் சுவிட்சர்லாந்து ஜெனீவாவில் OHCHR தலைமை அலுவலகத்தில் அமைந்திருக்கும். அது இலங்கை அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதுடன், சம்பந்தப்பட்ட தகவல்கள் எவையேனும் இருப்பின் அவற்றை தம்முடன் பகிர்ந்து கொள்ளுமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளும். தகவல்கள் மற்றும் சான்றுகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்களை அணுகுவதற்கான வேண்டுகோளும் விடுக்கப்படும்.

**புதிய OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்தின் பணியில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோர் எத்தகைய வகிபாகங்களைக் கொண்டுள்ளார்கள்?**

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோர் OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்தின் பணிகளின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு முதன்மையான பாகமாக இருந்து வருகின்றார்கள். பிரேரணை 46/1 அவர்களை வெளிப்படையான விதத்தில் அங்கீகரிப்பதுடன், ''பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோருக்காகப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும்'' என OHCHR இற்கு பணிப்பாணையை வழங்கியுள்ளது. இந்த கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறல் பணிகளையும் உள்ளடக்கிய விதத்தில், OHCHR இன் அனைத்து பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளில் பாதிக்கப்பட்டவரை மையமாக கொண்ட ஓர் அணுகுமுறை முதன்மையானதாக இருந்து வருகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோரின் ஆதாரங்கள், சான்றுகள், சாட்சியங்கள் மற்றும் தகவல்கள் என்பன பத்திரமான விதத்தில், பாதுகாப்பான முறையில் இந்தத் துறை தொடர்பான சர்வதேசத் தர நியமங்களின் பிரகாரம் பராமரிக்கப்பட்டுவரும்.

பணிகளில் தகவல்களை அறிந்த நிலையில் பங்கேற்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கும், வசதி செய்து கொடுப்பதற்குமென OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறும் கருத்திட்டம் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் மற்றும் அவர்களுடைய பிரதிநிதிகள் ஆகியோருடன் நெருக்கமாக இணைந்து செயற்படும். பொறுப்புக்கூறல் மற்றும் இழப்பீட்டுச் செயன்முறைகள் என்பவற்றுக்கான சாத்தியமான உத்திகளை வடிவமைப்பதனையும் இது உள்ளடக்குகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோருடனான OHCHR இன் ஏனைய அனைத்துப் பணிகளையும் போலவே, OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் கூருணர்வு கொண்டதாக இருந்து வருவதுடன், ''தீங்கிழைக்காதிருத்தல்'' என்ற முக்கியமான கோட்பாட்டுக்கு மேலதிகமாக, இந்த அணியுடன் சம்பந்தப்படுவதன் விளைவாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோர் தொடர்பாக தோன்றக் கூடிய ஏதேனும் பாதுகாப்புக் கரிசனை குறித்து கூருணர்வுடனும், விழிப்பாகவும் இருந்து வரும். திட்டவட்டமான கரிசனைகள் அவை தோன்றும் சந்தர்ப்பங்களிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, கவனத்தில் கொள்ளப்படும்.

**இந்தப் பணிப்பாணைக்கு எவ்வாறு நிதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது? OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டம் அதன் பணியை எப்போது ஆரம்பிக்கும்?**

மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை 46/1 ஐ அமுல் செய்வதற்கு மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அத்தகைய பணிப்பாணைகளுக்குப் பொருந்தக் கூடிய ஐக்கிய நாடுகள் வரவு செலவுத் திட்ட மற்றும் நிர்வாக செயன்முறைகள், நிர்வாக வரவு செலவு சம்பந்தப்பட்ட கேள்விகள் தொடர்பான ஆலோசனை கமிட்டி (ACABQ) மூலவளத் தாக்கங்கள் தொடர்பிலான விடயத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கின்றன. மறுபுறத்தில், ஐ நா பொதுச் சபையின் ஐந்தாவது கமிட்டி 2021 ஆம் ஆண்டில் அவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். 2021 ஆம் ஆண்டில் தயாரிப்புப் பணிகளைப் பொறுப்பேற்பதற்கு ஐந்தாவது கமிட்டியின் ஒப்புதலுக்கு அமைவாக ஆரம்ப ஊழியர் அணி ஒன்றுக்கான வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அலுவலகத்திற்கு முறையான

ஒப்புதல் கிடைத்திருக்கும் அதே வேளையில், 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முழுமையான ஊழியர் அணி அதன் பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விதிகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் பிரகாரம் அர்ப்பணிப்புடன் கூடிய இந்தக் கருத்திட்ட அணிக்கு தேவையான விசேட நிபுணத்துவத்துடன் கூடிய ஆளணியினரை மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் ஆட்சேர்ப்புச் செய்யும். ஏற்கனவே அதன் வசம் இருந்து வரும் அனைத்துத் தகவல்களையும் ஒன்று திரட்டுதல், அத்தகையத் தகவல்களைச் சேகரம் செய்து வைப்பதற்கான மத்திய தகவல் களஞ்சியமொன்றை அமைத்து, உரிய விதத்தில் இணைத்தல், சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்கீடுபாட்டாளர்களுடனும் கலந்தாலோசனை நடத்துதல் என்பவற்றையும் உள்ளடக்கிய தயாரிப்பு வேலையை இந்த அலுவலகம் துவக்கி வைத்துள்ளது. இந்தப் பிரேரணையை அமுல் செய்வதற்கு நடைமுறைகளை எடுக்கும் பொழுது, இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் பல்வேறு பங்கீடுபாட்டாளர்களுக்கும் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம் உரிய விதத்தில் தெரியப்படுத்தும்.

**இந்தப் பணிப்பாணைக்கு எவ்வாறு நிதியளிப்பு வழங்கப்படுகின்றது?**

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையொன்றின் மூலம் பணிப்பாணையைக் கொண்டிருப்பதனால் OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்துக்கான நிதியளிப்பு மேலே குறிப்பிடப்பட்டவாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் வழமையான வரவு செலவுத் திட்டத்துக்கு ஊடாக வழங்கப்படும். ஐ நா தரநியமங்கள் சார்ந்த வரவு செலவு செயன்முறை 2021 ஆம் ஆண்டின் போது, அடுத்த ஆண்டுக்கான OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்தின் வளங்கள் தொடர்பாக பரிசீலனை செய்து, தீர்மானிக்கும்.

**இந்தப் பணிப்பாணையின் கீழ் முன்னெடுக்கப்படும் பணிகள், ஐ நா மனித உரிமைகள் பேரவைக்கான உயர் ஆணையாளரின் அறிக்கைகளுக்கு பதிலீடாக இருந்து வருமா?**

இல்லை. 46/1 பிரேரணை, மனித உரிமைகள் பேரவை ''நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றில் ஏற்படும் முன்னேற்றத்தையும் உள்ளடக்கிய விதத்தில்'' இலங்கையில் பொதுவாக மனித உரிமைகள் நிலைமை தொடர்பான அதன் கண்காணிப்பையும், அறிக்கையிடலையும் அதிகரிக்க வேண்டுமென மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்திடம் புறம்பாக கேட்டுக் கொண்டுள்ளது. செப்டம்பர் 2021 மற்றும் மார்ச் 2022 காலப் பிரிவுகளின் போது பேரவைக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல் வேண்டும். அத்துடன் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான மேலும் தெரிவுகளை உள்ளடக்கிய விதத்திலான அனைத்துமடங்கிய அறிக்கை 2022 செப்டம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பேரவையின் பணிப்பாணையின் அந்தப் பாகத்தை நிறைவேற்றி வைக்கும்பொருட்டு, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகம் தகவல்களைச் சேகரிப்பதற்கும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் அதன் முயற்சிகளை அதிகரித்துக் கொள்ளும்.

OHCHR இலங்கைப் பொறுப்புக்கூறல் கருத்திட்டத்தின் பணியுடன் சம்பந்தப்பட்ட முன்னேற்றங்கள், மனித உரிமைகள் பேரவைக்கான இந்த வாய்மொழி மூலமான இற்றைப்படுத்தல்களிலும், எதிர்கால அறிக்கைகளிலும் உள்ளடக்கப்படும்.

பிரேரணை 46/1 இற்கான இணைப்பு: https://undocs.org/A/HRC/RES/46/1

இது தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் தயவு செய்து அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்: ohchr-slaccountability@un.org